**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.513/2021**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயபால் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of May 06th, 2025.

**(எதிரிகள் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் ஜெயகுரு சாமில் என்ற பெயரில் மரக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 07.09.2020 ம் தேதி, மதியம் சுமார் ஒரு மணியளவில் நானும், எனது மகன் சரவணகுரு கோவில்பட்டியில் மரக்கடையில் இருந்தோம். சுமார் 2 மணியளவில் எனது மனைவி அ.சா.1 போன் மூலம் வீட்டில் இரண்டு நபர்கள் வந்து கொள்ளையடித்து சென்றதாக கூறினார். உடனடியாக, நானும், எனது மகனும் அங்கிருந்து கிளம்பி வீட்டிற்கு வந்தோம். வீட்டிற்கு வந்தவுடன் எனது மனைவி இரண்டு பேரில் ஒருவர் ஹெல்மெட் அணிந்து கொண்டும், இன்னொருவர் பர்தா அணிந்து கொண்டும் வந்தார்கள் என்றும், ஹெல்மெட் அணிந்தவர் காம்ப்வுண்ட் சுவர் கேட்டை திறந்து கதவு ஓரமாக நின்று கொண்டார் என்றும், மற்றொருவர் காலிங் பெல்லை அடித்துக்கொண்டிருந்தார் என்றும், அந்த நபர் பர்தா அணிந்திருந்தார்

என்றும், பெல் அடித்ததில் அ.சா.1 வீட்டின் கதவை திறந்தார் என்றும், கதவு ஓரமாக நின்று கொண்டிருந்த ஹெல்மேட் அணிந்து கொண்டிருந்த நபர் எனது மனைவியின் வாயை பொத்தி, வீட்டிலிருந்த மர ஷோபாவில் தள்ளி, ஹெல்மெட்டை வைத்து அவரை அமுக்கி வைக்க, பர்தா அணிந்திருந்த நபர் உள்ளே வந்து, போன் சார்ஜர் ஒயரால் எனது மனைவியின் கைகளை பின்னால் கட்டி, மரசோபாவில் எனது மனைவியின் தலையை அமுக்கி பிடித்து கொண்டு, பணம், நகை இருக்கும் இடத்தை சொல்? என்று மிரட்டி, ரூமிற்குள் அவரை அழைத்து சென்று, கத்தி, சுத்தியல், ஸ்குரூ டிரைவர் ஆகியவற்றை காட்டி மிரட்டி, அடுத்த ரூமில் இருந்த பணம் ரூ.50000/– மற்றும் நகைகள் 126 பவுண் ஆகியவற்றை கொள்ளையடித்து சென்று விட்டதாக கூறினார். கொள்ளையர்கள் சென்ற பிறகு எனது மனைவி வீட்டிற்கு வெளியே வந்து சத்தம் போட, பக்கத்து வீட்டில் இருந்த பவானி என்பவர் எனது மனைவியின் சத்தம் கேட்டு அவரது கையில் கட்டியிருந்த கட்டை அவிழ்த்து விட்டார். இந்த சம்பவம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தோம். தேதி நியாபகமில்லை. புகார் கொடுத்து ஒரு மாதம் கழித்து, காவல் நிலையத்திற்கு எனது மனைவி மற்றும் மகனை அழைத்ததின் பேரில் காவல் நிலையம் சென்று எங்களது நகைகளை அடையாளம் காட்டினார்கள். எதிரிகளை போலீசார் பிடித்து வைத்திருந்தார்கள். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நான் முதல் விசாரணையில் கூறியவாறு தான், போலீசார் விசாரணையிலும் கூறினேன். நான் எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். நான் 35 ஆண்டுகளுக்கு மேலாக மர வியாபாரம் பார்த்து வருகிறேன். முதலில்

எதிரி மணிகண்டனின் தகப்பனார் என்னிடம் வேலை பார்த்தார். மணிகண்டனும் என்னிடம் வேலை பார்த்தார். எதிரி மணிகண்டன் கொரோனாவிற்கு முன்பாக என்னிடம் வேலை பார்த்தார். சுமார் இரண்டரை ஆண்டுகள் என்னிடம் வேலை பார்த்திருப்பார். சம்பவம் நடந்தவுடன் நான் கோவில்பட்டியிலிருந்த தென்காசி காவல்நிலையத்திற்கு நானோ அல்லது எனது மனைவி மூலமாகவோ தகவல் தெரிவிக்க முயற்சி செய்யவில்லை. நாங்கள் வீட்டிற்கு வரும்போது சுமார் மூன்று அல்லது மூன்றரை மணி இருக்கும். மூன்றரை மணிக்கு வந்த நாங்கள் ஏன் காலதாமதமாக 5 மணிக்கு காவல்நிலையம் சென்றோம் என்றால், என்னுடைய மனைவி மிகவும் படபடப்பாக இருந்தார். அப்போது எத்தனை பேர் கூடியிருப்பார்கள் என்று நான் கவனிக்கவில்லை. சாட்சி விநாயகம் மற்றும் அல்போன்ஸ் ஆகியோர் எனக்கு தொழில் ரீதியாக பழக்கம். ஒருவருக்கு ராமச்சந்திரப்பட்டணம், இன்னொருவருக்கு மேலமெஞ்ஞானபுரம். சாட்சிகள் இருவரும் காவல்நிலையத்திற்கு சென்றிருப்பார்கள். புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் காவல்நிலையத்திற்கு எனது மனைவியுடன் செல்லவில்லை. புகார் வீட்டில் வைத்து எழுதப்பட்டதா? என்று எனக்கு தெரியாது. அந்த நேரம் நான் மிகவும் பதற்றமாக இருந்ததினால், எதையும் கவனிக்கும் மனநிலையில் நான் இருக்கவில்லை. காவல்நிலையத்திலிருந்து உடனடியாக வீட்டிற்கு வந்து பார்வையிட்டார்கள். அவர்கள் வந்த நேரம் எனக்கு நியாபகமில்லை. எனது மனைவி மற்றும் மகனை இரண்டு, மூன்று முறை போலீசார் சம்பவத்திற்கு பிறகு அழைத்து விசாரித்தார்கள். நான் காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு செல்லவில்லை. போலீசார் எனனிடம் விசாரிக்கவில்லை. கொள்ளையடித்த நகைகள் எனது மனைவியின் பெற்றோர்கள் போட்டதா? அல்லது நான் வாங்கிக்

கொடுத்ததா? என்று என்னால் சரியாக கூறமுடியாது. எனது மனைவிக்கு எத்தனை பவுன் நகைகள் இருந்தது என்று துல்லியமாக எனக்கு தெரியாது. இந்த நகைகள் வாங்கியதற்கான இரசீதுகள் எதுவும் எங்களிடம் இல்லை. 1வது எதிரி மணிகண்டனின் தகப்பனாரிடமிருந்து பத்திரத்தை வாங்கி வைத்து கொண்டு, அவரது தகப்பனார் பணம் கொடுத்த பிறகும் பத்திரத்தை திருப்பி கொடுக்காததினால், அவருக்கும், எனக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால், அவ்வாறு எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை. அவரிடமிருந்து நாங்கள் எந்த பத்திரமும் வாங்கவில்லை. 1ம் எதிரியின் தகப்பனார் என்னிடமிருந்து வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்த பிறகும், நான் பத்திரத்தை திருப்பி கொடுக்காததினால் எங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் திட்டம் போட்டு, எதிரிகளை பழி வாங்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

C KATHIRAVAN Digitally signed by C KATHIRAVAN Date: 2025.05.12 15:50:55 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No.513/2021</u>**
**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணகுரு | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of May 06th, 2025.

**(எதிரிகள் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் ஜெயகுரு சாமில் என்ற பெயரில் மரக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா. அ.சா.2 எனது அப்பா. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 07.09.2020ம் தேதி, மதியம் சுமார் ஒரு மணியளவில் நானும், எனது அப்பாவும் சரவணகுரு கோவில்பட்டியில் மரக்கடையில் இருந்தோம். சுமார் ஒரு மணியளவில் எனது அம்மாவிடம் இருந்து போன் வந்தது. போனில் இரண்டு நபர்கள் வீட்டிற்குள்ளே வந்து, எனது அம்மாவை கட்டி போட்டு விட்டு, நகை மற்றும் பணத்தை கொள்ளையடித்ததாக கூறினார். உடனே நாங்கள் வீட்டிற்கு திரும்பி வந்தோம். நாங்கள் வந்தபோது, அம்மா மிகவும் பதற்றமாக இருந்தார். அவரிடம் கேட்டபோது, நீண்ட நேரமாக வீட்டின் காலிங்பெல் அடித்தது என்றும், அவர் கதவை திறந்து வெளியே வந்தபோது, ஹெல்மெட் போட்ட நபர் என் அம்மாவின் கையை பிடித்தார் என்றும், பர்தா போட்ட நபர் எனது அம்மாவின் கையை கட்டி, ஹெல்மெட்

போட்ட நபர் வடக்கு பக்கம் ரூமிற்குள் அழைத்து சென்று எனது அம்மாவை துன்புறுத்தி பணம் எங்கே என்று கேட்டதாகவும், பக்கத்தில் இருந்த பீரோவை உடைத்து பணம் ரூ.50000/-மற்றும் சில்லரை பணத்தையும் கொள்ளையடித்ததாகவும், பிறகு அம்மாவை குளியலறைக்குள் தள்ளி, அவரை அடைத்து வைக்க முயற்சித்த போது எனது அம்மா பயந்து விட்டார். அவரை வெளியே அழைத்து வந்து, சுத்தியல், கத்தி ஆகியவற்றால் மிரட்டி, மாடியிலுள்ள அறைகளுக்கெல்லாம் அழைத்து சென்று விட்டு, திருப்பி கீழே வந்து வீட்டின் வடக்கு பக்கமுள்ள அறையில் எனது அம்மாவை உட்கார வைத்து விட்டு, செவுட்டு பயலே, உன்னை எல்லாம் கூட்டி வரக்கூடாது என்று பர்தா போட்ட நபரை ஹெல்மேட் போட்ட நபர் திட்டியதாகவும், பிறகு எனது அம்மாவை ஹாலுக்கு அழைத்து வந்து தாலிச்செயினை ஹெல்மெட் போட்ட நபர் கழற்ற சொன்னதாகவும், இதை செய்கை மூலம் பர்தா போட்ட நபர் தான் ஹெல்மெட் போட்ட நபருக்கு கூறினார் என்றும், அப்போது தாலிச்செயினை விட்டு விடுங்கள் என்று கூறியதற்கு, "உன் புருஷன் தான் சம்பாதிக்கிறான்லா, புதுசா வாங்கிக்கோ" என்று கூறினார் என்றும், கட்டை கண்ணாடியை பார்த்து அவிழ்த்துக்கோ, நாங்கள் வாசலில் தான் இருப்போம் என்று கூறிவிட்டு சென்று விட்டார்கள். சிறிதுநேரம் கழித்து எனது அம்மாவை கதவை திறந்து பார்த்து கொள்ளையர்கள் இல்லை என்பதை தெரிந்து கொண்டு பக்கத்து வீட்டில் போய் நடந்த விபரங்களை கூற, அவர்கள் கட்டை அவிழ்து விட்டதாக கூறினார். எங்கள் வீட்டிலிருந்து 200 பவுண் நகைக்கு மேல் கொள்ளையடித்து விட்டார்கள். அதில் 120 பவுண் எங்களுக்கு திரும்ப கிடைத்தது. இது சம்பந்தமாக நாங்கள் காவல்நிலையத்திற்கு மாலை 05.00 மணியளவில் புகார் கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள

அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். 10.10.2020 ம் தேதி, காவல்நிலையத்தில் அழைத்ததின்பேரில் அங்கு சென்று நகைகளை அடையாளம் காண்பித்தோம். எதிரிகளை காவல் நிலையத்தில் போலீசார் பிடித்த வைத்திருந்தார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நான் நீதிமன்றத்தில் கூறியவாறு தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன். நான் எம்.பி.ஏ படித்துள்ளேன். நாங்கள் வீட்டிற்கு வரும் போது சுமார் 50 பேர் கூடியிருப்பார்களா? என்றால் 10 பேர் இருப்பார்கள். சாட்சிகள் விநாயகம், அல்போன்ஸ் ஆகியோர்கள் எனது உறவினர்களா? என்றால் விநாயகம் எங்களிடம் வேலை பார்க்கிறார். அல்போன்ஸை யாரென்று எனக்கு தெரியாது. 1ம் எதிரி மணிகண்டன் மற்றும் அவரது தகப்பனார் எங்களது உறவினர்கள் தான். 1ம் எதிரி மணிகண்டன் எங்களிடம் சுமார் 3 ஆண்டுகள் வேலை பார்த்தார். சம்பவத்தின் போது, அவர் எங்களிடம் வேலை பார்க்கவில்லை. 1ம் எதிரி மணிகண்டனின் தகப்னாருக்கும், எனது அப்பாவிற்கும் கொடுக்கல் – வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை உள்ளதா? என்றால் அது எனக்கு தெரியாது. புகார் எங்கு வைத்து எழுதப்பட்டது என்று எனக்கு நியாபகமில்லை. புகாரை யார் எழுதினார் என்று எனக்கு நியாபகமில்லை. காவல் நிலையத்திற்கு நான், எனது அம்மா, அப்பா ஆகியோர் 3 பேர் தான் சென்றோம். வேறு யாரும் வரவில்லை. காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்த பிறகு அன்றைய தேதியே போலீசார் வந்தார்கள். அவர்கள் வந்த நேரம் எனக்கு சரியாக நியாபகமில்லை. புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் நடந்த சம்பவத்தை பற்றி எழுதப்பட்டது. புகாரை யார் படித்து காண்பித்தார்கள் என்று எனக்கு தெரியாது. 200 பவுன் நகை காணாமல்

போனது என்ற விபரத்தை பின்னர் நாங்கள் போலீசில் தெரிவித்தோம். 200 பவுன் நகை எப்போது வாங்கப்பட்டது? என்ற விபரம் எனக்கு நியாபகமில்லை. சம்பவம் முடிந்த பிறகு போலீசார் ஒருமுறை எங்களை அழைத்து விசாரித்தார்கள். நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்றபோது, எதிரிகளுடன் 10–20 பேர் காவல்நிலையத்தில் இருந்தார்களா? என்றால் அது எனக்கு நியாபகமில்லை. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி மணிகண்டனின் தந்தைக்கும், எனது தகப்பனாருக்கும் உள்ள கொடுக்கல் – வாங்கல் சம்பந்தமான முன்விரோதத்தை மனதில் வைத்து கொண்டு, எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக நானும், எனது பெற்றோரும் சேர்ந்து இந்த பொய் புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.05.12 15:51:03 +0530